பகுதியிலேயிருந்துதான் வர வேண்டும். மத்தியிலே இருக்கிற இடமாக ஆரணி இருக்கிற காரணத்தால், செய்யாறிலே இருக்கிற துணைக் காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகம் மற்றும் உள்ள அலுவலகங்களை ஆரணிக்கு மாற்றித்தர அரசு ஆவன செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குத் தனிக் கேள்வி எழுப்புமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 24 திரு. கு. தங்கமுத்து, திரு. கே. ஆர். முருகானந்தம், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

24—

பூதான இயக்கம் மூலம் தானமாக வழங்கப்பட்ட நிலங்கள்.

3239 திரு. கு. தங்கமுத்து:

திரு. கே. ஆர். முருகானந்தம்:

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பார்:

(அ) ஆச்சாரியா வினோபாபாவே ஆரம்பித்த பூதான இயக்கத்திற்கு தமிழ்நாட்டிலிருந்து எவ்வளவு நிலம் தானமாக கொடுக்கப்பட்டது?

(ஆ) அந்த நிலங்கள் எந்த முறையில் பிறருக்கு பிரித்துக் கொடுக்கப்பட்டன?

(இ) ஒப்படை செய்யாமல் மீதமுள்ள நிலங்கள் எப்பொழுது ஒப்படை செய்யப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ), (ஆ) மற்றும் (இ) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே தானமாகப் பெறப்பட்ட நிலம், 9,929 ஹெக்டேர் ஆரம்ப கட்டத்தில், கிராமங்களில் ‘தலக்குழு’ அமைக்கப்பட்டு அதன் மூலமாக, தமிழ்நாடு பூதான வாரிய மூலமாகக் கிடைக்கப்பட்ட நிலங்கள் பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஒரு நபருக்கு 2.5 எக்கர் வீதம் பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மீதமுள்ள நிலங்கள் விரைவிலே பிரித்துக் கொடுக்கப்படும்.

1992 பிப்ரவரி 4]

திரு. கு. தங்கமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆச்சாரியா வினோபாபாவே ஆரம்பித்த இந்த பூதான இயக்கத்திற்கு எடுக்கப்பட்ட நிலங்கள் எவ்வளவு என்று அறிவித்து இருக்கிறார்கள். மீதமுள்ள நிலங்கள் எவ்வளவு? அந்த நிலங்கள் எப்போது பிரித்துக் கொடுக்கப்படும் என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9.50

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மீதம் 1,404 ஹெக்டேர் இருக்கிறது. அவைகளை விரைவிலே பிரித்துக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. கே. ஆர். முருகானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் எத்தனை கிராமங்கள் கிராம தானமாக பூமிதானச் சட்டப்படி ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பதையும், அதன்மூலம் எத்தனை ஏக்கர் நிலங்கள் கிராமதான இயக்கத்தில் உள்ளது என்பதையும், கிராமதானத்தினுடைய வரைமுறைகள் என்ன என்பதையும் மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பூமிதானத்தைப் பற்றியது கேள்வி. கிராமதானத்தைப்பற்றியது அல்ல. அது வேறு, இது வேறு. ஆகவே, கிராமம் எவ்வளவு என்பது இதில் துணைக் கேள்வியாக வராது. பூமிதானத்தைப் பற்றித்தான் துணைக் கேள்வி வரும்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கிராமதானத்தின்படி தமிழ்நாட்டில் 2,049 கிராமங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அந்தக் கிராம தானத்தின் மூலமாக 1,50,105 ஏக்கர் நிலங்கள் இன்றைக்கு அரசிடத்தில் வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கிராமதானம் என்றால், அந்தக் கிராமத்தைக் கொடுக்கிறபொழுது, அந்தக் கிராமத்திலுள்ள பட்டாதாரர்கள் பாதிப் பேர் அல்லது மூன்றில் இரண்டு பேர் உள்ளவர்கள் அதற்குச் சம்மதம் தெரிவிக்க வேண்டும் அல்லது அந்த கிராமத்திலுள்ள நிலங்களில் பாதி நிலங்களுக்கு மேல் அந்தக் கிராமதானத்திலே கொடுப்பதற்கு அவர்கள் ஒப்புதல் தர வேண்டும். அப்படிக் கொடுக்கப்பட்டால் அந்த நிலம் கிராமதானமாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. எடுத்துக் கொள்ளப்பட்ட பிறகு அந்த நிலம் அத்தனை

யும் கிராமதானத்திற்குச் சொந்தம் ஆகிறது. யார் யார் அந்த நிலத்திற்குச் சொந்தக்காரர்களோ அவர்கள் அதில் பயிர் செய்ய லாம்; அவர்களுக்கு வேண்டிய உதவிகளை அந்தக் கிராமதானத் தின் மூலமாக—அந்த வாரியத்தின் மூலமாக—பூமிதான இயக் கத்தின் மூலமாக உதவிகளைச் செய்வார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வ. சத்தியமூர்த்தி.

திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, பூமிதான இயக்கத்தின் மூலம் கொடுக்கப்பட்ட நிலங்களில் 1,404 ஹெக்டேர் இதுவரையில் பிரித்துக் கொடுக்கப்படாமல் இருக் கிறது என்று சொன்னார்கள். அந்த 1,404 ஹெக்டேர் நிலங்கள் இதுகாறும் யாருடைய அனுபவத்தில் இருக்கின்றன? இத்தனை ஆண்டுக் காலமாக அந்த நிலம் பிரித்துக் கொடுக்கப்படாததற்கு என்ன காரணம் என்பதையும் மாண்புமிகு அமைச்சரவர்கள் அவையில் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, அதிலே சில பகுதிகள் பூமிதான இயக்கத்திலே இருக் கிறது. சில பகுதிகள் ஆக்கிரமிப்பில் இருக்கின்றன. சில பகுதி களை அவர்கள் பூமிதானமாகக் கொடுத்துவிட்டு, அவர்களுடைய வாரிசுகள் கோர்ட்டிலே வழக்குத் தொடுத்து இருக்கிறார்கள். இவைகளையெல்லாம் அரசு தீவிரமாக நடவடிக்கை எடுத்து, விரைவிலே கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. பி. ராஜு.

திரு. கே. பி. ராஜு: பேரவைத் தலைவரவர்களே, பூமிதானம் கொடுத்ததாக அமைச்சரவர்கள் கூறினார்கள். அந்த பூமி தான மாகக் கொடுப்பது, யார் யாருக்கு எந்தெந்தப் பிரிவின் கீழ் தருகி றார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, பூமிதானம் என்பது ஆச்சாரியா வினோபாபாவே அவர்கள் 1956 ஆம் ஆண்டு தமிழ்நாட்டிற்கு வருகிறபொழுது, இங்கே உள்ளவர்கள் கொடுப்பதற்குத்தான் பூமிதானம் என்று பெயர். அவர்கள் கொடுத்த நிலங்களெல்லாம் பூமிதானத்தில் சேர்க்கப்படுகின்றன அதைப் பிரித்துக் கொடுக்கிறபொழுது எப்பொழுதும் அரசினுடைய விதிமுறைப்படியும், பூமிதான விதி முறைப்படியும் நிலமற்றவர்களுக்கு குறைந்தது இரண்டரை

எக்கருக்கு அதிகம் இல்லாமல் பிரித்துக் கொடுக்கப்படுகிறது. அதற்குத்தான் முதலில், 'தலக்குழு' என்று சொன்னேன். 'தலக்குழு' என்றால், அந்தக் கிராமம்—கிராமம் என்றால், தலம் என்றால் அந்த இடம். அந்தக் கிராமத்திலே ஒரு குழு அமைத்து, அந்தக் குழுவின் மூலமாக அது முதலிலே கொடுக்கப்பட்டது. இப்பொழுது வாரியம் அமைத்து, வாரியத்தின் மூலமாகக் கொடுக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: செல்வி ஜி. மல்லிகா.

செல்வி ஜி. மல்லிகா: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, புவி ஆள வந்த நமது இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவியின் ஆட்சியில் பூதான இயக்கத்தின் மூலம் பெறப்பட்ட நிலங்களை, நிலம் இல்லாதவர்களுக்கு வழங்கி, சர்வோதய கிராமம் அமைக்க வேண்டுமென்ற திட்டத்தை அமல்படுத்த அரசு முயற்சி செய்யுமா, முயற்சிக்குமா?

முற்பகல் 9.55

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான ஒரு வாரியம் அமைக்க வேண்டுமென்றால், ஆச்சாரிய வினோபாபாவேயினால் அமைக்கப்பட்ட ஒரு குழு வார்தாவில் இருக்கிறது; அவர்களைக் கேட்டுத்தான் வாரியம் அமைக்க வேண்டும். இப்போது, தமிழக முதலமைச்சர், புரட்சித் தலைவி அவர்களின் அனுமதி பெற்று, ஒரு சட்ட முன்வடிவு இந்த அவை முன் வைக்க இருக்கிறோம். அந்த சட்ட முன்வடிவு வந்துவிட்டால், இந்த அரசே வாரியத்தை அமைத்து, நிலங்களைக் கையகப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 25. திரு. எம். பூராசாமி, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

25—

தரங்கம்பாடி வட்டாட்சியர் அலுவலகக் கட்டிடம்

*3307. திரு. எம். பூராசாமி:

மாண்புமிகு வருவாய் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பூம்புகார் தொகுதி, தரங்கம்பாடி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு புதிய கட்டிடம் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?